27.01.16

தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

## விஸ்வநத்தத்தில் கால்நடை கிளை மருந்தகம்: அமைச்சர் தகவல்

சிவகாசி வட்டம் விஸ்வநத்தத்தில் கால்நடை கிளை மருந்தகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக செய்தி விளம்பரம் மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் கே.டி.ராஜேந்திரபாலாஜி தெரிவித்தார்.

விஸ்வநத்தத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் 357 பேருக்கு முதியோர் உதவிதொகை பெறுவதற்கான அரசு ஆணையை பயனாளிகளிடம் அமைச்சர் வழங்கி மேலும் பேசியது: தேர்தல் வாக்குறுதிகளை முதல்வர் நிறைவேற்றி விட்டார். முன்பு முதியோர்களுக்கு உதவித்தொகை ரூ 500ஆக இருந்தது. அதனை ரூ.1,000ஆக உயர்த்தியவர் ஜெயலலிதா.

புதிய குடும்பஅட்டை, முதியோர் உதவித்தொகை உள்ளிட்ட மனுக்களை அதிகாரிகள் ஆய்வு செய்து, உடனே நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். சிவகாசி சட்டப்பேரவைத் தொகுதியில் பல சாலைகள் சீரமைக்கப்பட்டுள்ளது. வடமலாபுரம் உள்ளிட்ட 5 கிராமங்களில் அரசு ஆரம்ப சுகாதாரநிலையம் அமைக்கப்பட்டது. இதில், 4 இடங்களில் கட்டடம் கட்டப்பட்டுவிட்டது.

விஸ்வநத்தத்திலும் விரைவில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் கட்டப்படும். மக்களின் கோரிக்கையை ஏற்று விஸ்வநத்தத்தில் கால்நடை

கிளை மருந்தகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றார்.

நிகழ்ச்சியில், விருதுநகர் மக்களவை உறுப்பினர் டி.ராதாகிருஷ்ணன், சமூகப் பாதுகாப்பு திட்ட தனி துணை ஆட்சியர் தியாகராஜன், சிவகாசி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் சி.சுப்பிரமணியம், மாவட்ட கவுன்சிலர் கருப்பசாமி, ஊராட்சி மன்றத் தலைவி கே.வி.கே.சித்ரா, சித்துராஜபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் ஆர்.எஸ்.சுப்புராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## அமராவதி பாசனத்துக்கு மார்ச் 15 வரை தண்ணீர் விடக் கோரிக்கை

அமராவதி பழைய, புதிய பாசனத்துக்காக மார்ச் 15-ஆம் தேதி வரை வாய்க்காலில் தண்ணீர் திறந்து விட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தாராபுரம் கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம், கோட்டாட்சியர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு கோட்டாட்சியர் கு.சரவணமூர்த்தி தலைமை வகித்தார். நேர்முக உதவியாளர் தட்சிணாமூர்த்தி முன்னிலை வகித்தார். வேளாண் உதவி இயக்குநர் வெங்கடாசலம், கால்நடை பராமரிப்புத் துறை அலுவலர் வெங்கடேசன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.

கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்க திருப்பூர் மாவட்டத் தலைவர் ஏ.காளிமுத்து: நல்லதங்காள் ஓடை அணையில் அனுமதிக்கப்பட்ட அளவை மீறி மண் அள்ளப்படுகிறது.

சூரியநல்லூரில் மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு ஆலை அமைவதைத் தடுக்க வேண்டும்.

அலங்கியம் பாசனத் தலைவர் ஆர்.ஈஸ்வரமூர்த்தி: அமராவதி பாசனத்தில் 100 சதவீத நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. வாய்க்காலில்

தண்ணீர் விடும் காலத்தை மார்ச் 15-ஆம் தேதி வரை நீடித்தால்தான் அறுவடை நடைபெறும்.

வேளாண் பொறியியல் துறை சார்பில் விவசாயிகளுக்கு அறுவடை இயந்திரங்களை வாடகைக்கு விட வேண்டும்.

லிங்கம் சின்னசாமி (விவசாயி): திப்பிலி, அமுக்கிரான் கிழங்கு, ஆடாதொடை, நிலவேம்பு போன்ற மூலிகைப் பயிர்களை விவசாயிகளிடம் இருந்து தனியார் நிறுவனம் நேரடியாகப் பெற்றுக் கொள்கிறது. எனவே, தோட்டக் கலைத் துறையினர் மூலிகைப் பயிர் சாகுபடியை ஊக்குவிக்க வேண்டும்.

பழனிசாமி (விவசாயி): நெல் கொள்முதல் நிலையங்கள் தாராபுரம் பகுதியில் திறக்க வேண்டும். வேளாண் பொறியியல் துறையிடம் தட்டு வெட்டும் கருவி தேவை என ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். இவை விரைவில் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விவசாயிகளின் கோரிக்கைகள் அரசுக்குத் தெரியப்படுத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என கோட்டாட்சியர் கு.சரவணமூர்த்தி தெரிவித்தார்.

## அரியலூரில் ஜன. 29-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 29ஆம் தேதி காலை 10.00 மணிக்கு மாவட்ட ஆட்சியரக அலுவலகத்தில் பிரதான கூட்டரங்கில் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் விவசாயிகள், முன்னோடி விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு தங்களது விவசாயம் சார்ந்த குறைகளை தெரிவிக்கலாம் என ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## நாளை பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம்

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வியாழக்கிழமை (ஜன. 28) நடைபெற உள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் கே. நந்தகுமார் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சியர் கே. நந்தகுமார் தலைமையில் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற உள்ளது.

கூட்டத்தில் நீர்ப்பாசனம், கடனுதவிகள், வேளாண்மை இடுபொருள்கள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் பற்றிய முறையீடுகள் குறித்து விவாதிக்கப்படும்.

பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் மற்றும் விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்று தங்களது குறைகளை தெரிவிக்கலாம்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### பஞ்சகவ்யா தயாரிக்க நாட்டு பசுமாடு தேவையா




இயற்கை விவசாய உத்தியான பஞ்சகவ்யா தயாரிப்பது மிக எளிது. அதற்கு பசுமாடு தான் தேவை. அதுவும் நாட்டு மாடு தான் நல்லது என்ற பிரசாரம் செய்து சில நாட்டு மாடு வியாபாரிகள் நல்ல காசு பார்த்து வருவது அறியாமை. ஒவ்வொரு விலங்கும் கழிவினை வெளியிடுவது இயற்கை. இதில் நாட்டு மாடு வேற மாதிரி கோமியம் தரும். வேற மாடு வேஸ்ட் என்று கூட பிரச்னை செய்வது நல்லதல்ல. மாடுகள் உண்ணும் உணவில் எந்த மாறுபாடும் நாம் காட்டாத போது கழிவு எப்படி வேறுபடும். ஒவ்வொரு விவசாயி வீட்டிலும் பசுமாடு இல்லாவிட்டாலும் பரவாயில்லை. கன்றுக்குட்டிகளாவது வளர்த்து வரலாம். அல்லது ஆடு வளர்க்கலாம். அருகில் உள்ள விவசாயிகளிடம் விலை கொடுத்து கூட பசுமாட்டு சிறுநீர் 3 லிட்டர் வாங்குவது பெரிய கஷ்டமான வேலையே

இல்லை.

வீட்டை விட்டு வெகு தொலைவில் உள்ள கடைக்குப்போய் மருந்து அதிக விலை கொடுத்து வாங்க மனம் உள்ளவருக்கு அருகில் கிடைக்கும் கழிவினை வாங்குவது ஒன்றும் பெரியதாக தென்படாது. மிகவும் எளிய பொருள் தான் பஞ்சகவ்யா. அது தயாரித்திட பச்சை பசுஞ்சாணம் 5 கிலோ, பசுமாட்டு சிறுநீர் 3 லிட்டர், பசும்பால் 2 லிட்டர், தயிர் 1 லிட்டர், நெய் - 1லிட்டர், நாட்டு சர்க்கரை 1 கிலோ, இளநீர் 3 லிட்டர், வாழைப்பழங்கள் 12 எண் தேவை. பச்சை பசு சாணி 5 கிலோவுடன் பசுமாட்டு நெய் 1 லிட்டரை கலந்து பிசைந்து ஒரு வாயகன்ற மண்பானையில் 4 அல்லது 5 நாட்கள் வைக்கவும். இதை தினம் இருமுறை அதாவது காலை மற்றும் மாலை வேளைகளில் நன்கு கலக்கவும்.

ஐந்தாவது நாள் மற்ற பொருட்களுடன் இவைகளை நன்கு கலக்கி விடவும். கம்பி வலையில் வாயை மூடி நிழலில் வைக்கவும். தினம் இருமுறையோ அல்லது பல முறையோ நன்கு கலக்கி விடவும். இதனால் அதிக காற்றோட்டம் ஏற்பட்டு அபரிதமாக நுண்ணுயிர்கள் உற்பத்தி ஆகும் வாய்ப்பும் 15 நாளில் பஞ்சகவ்யா ரெடியாகும் வாய்ப்பும் உள்ளது. இதை ஆறு மாதம் வரை தினமும் கலக்கி விட்டு கெடாமல் பயன்படுத்தலாம். தண்ணீர் குறைத்து கெட்டியான மீண்டும் போதிய அளவு தண்ணீர் சேர்த்து கலக்கி வர வேண்டும்.

10 லிட்டர் நீரில் 300 மில்லி பஞ்சகவ்யா கலந்து கொண்டு இலைவழி உரம் அல்லது பயிர்க்கு, நேரடியாக ஊற்றுதல் மூலம் பலன்பெறலாம். கைத்தெளிப்பானில் தெளிக்கும்போது வடிகட்டி பயன்படுத்தவும். விசைத் தெளிப்பானின் அடைப்பானையுடன் குழாயின் நுனிப்பகுதியையும் பெரிதாகச் செய்து கொண்டால் அடைப்பின்றி தெளிப்பு சீராக வரும் பஞ்சகவ்யா 75 சதம் உரமாகவும் 25 சதம் பூச்சி மற்றும் நோய்கொல்லி மருந்தாகவும் வேலை செய்து நிறைய நன்மைகள் கிடைக்கின்றன. மேலும் விபரம் பெற 98420 07125 என்ற எண்ணை தொடர்பு

கொள்ளவும்.**-டாக்டர்பா.இளங்கோவன், தோட்டக்கலை உதவி இயக்குநர், உடுமலை, திருப்பூர்.**

## இயற்கை உணவில் வளரும் பிராய்லர் கோழி



கீரை, காய்கறி, மஞ்சள் பொடி கலந்த குடிநீர், பால் என பிராய்லர் கோழி பண்ணையில் கோழிகளுக்கு சத்துமிக்க இயற்கை உணவுகளை மட்டுமே கொடுத்து வளர்க்கிறார் மாற்றுத்திறனாளியான கோபி. மதுரை அழகர்கோவில் அருகே தொண்டமான்பட்டியை சேர்ந்த இவர், டிப்ளமா படித்துள்ளார். துவக்கத்தில் "டிவி' "ரேடியோ' பழுது நீக்கி வந்தார். அதில் போதிய வருமானம் இல்லை. தந்தை செல்லத்திற்கு சொந்தமான 10 ஏக்கரில் தென்னை, மா, கொய்யா, வாழை விவசாயத்தில் எட்டு ஆண்டுகளாக ஈடுபட்டு வருகிறார். நல்ல வருவாய் கிடைத்தது. தோட்டத்தின் ஒரு பகுதியில் தனியார் பிராய்லர் கோழி நிறுவனத்திற்காக

கோழிப்பண்ணை அமைத்தார். இவரது பண்ணையில் தலா இரண்டு முதல் இரண்டே கால் கிலோ எடையுடன் ஆரோக்கியமாக வளர்க்கப்பட்ட கோழிகள் 45 நாட்களுக்கு ஒரு முறை 8,000 எண்ணிக்கையில் உற்பத்தி செய்கிறார். கோபி கூறியதாவது: தனியார் பிராய்லர் கோழி நிறுவனம் தடுப்பூசி போடப்பட்ட குஞ்சுகள், தீவனத்தை தருகிறது. 45 நாட்களுக்கு பின் கோழிகளை எடுத்து செல்கின்றனர். கால்நடை மருத்துவர் ஒருவர் தினமும் பண்ணைக்கு வந்து கோழிகளை பார்வையிடுகிறார்.

கோழியில் பூச்சி, பேன் தாக்காமல் இருக்க மஞ்சள், பெருங்காயம், பூண்டு கலவையை மிக்ஸியில் அரைத்து தண்ணீர் கலவையில் கோழிகளுக்கு தெளித்து விடுவதால் பூச்சி தாக்குதல் இருக்காது. நுண்ணூட்ட சத்துக்காக முருங்கை கீரை, அருகம்புல், காய்கறிகளை, மக்காச்சோளத்துடன் கலந்து தீவனமாக தருகிறோம். குடிநீரில் பால் கலந்து கொடுப்பதால் கோழிகள் கால்சியம் சத்து மிகுதியுடன் வளரும். விவசாயத்துடன் இணைத்தொழிலாக பிராய்லர் கோழி வளர்க்கிறேன். இதன் மூலம் மாதம் ரூ.25 ஆயிரம் முதல் ரூ.30 ஆயிரம் வரை கிடைக்கிறது. அடுத்ததாக நாட்டுக்கோழி பண்ணை அமைக்க உள்ளேன் என்றார். இயற்கை உணவு தொழில்நுட்பம் குறித்து 90476 57111 ல் கேட்கலாம்.
- கா.சுப்பிரமணியன், மதுரை.

## சின்ன சின்ன செய்திகள்



### தினைவெண்பொங்கல்

தேவையான பொருட்கள்: தினையரிசி - 1கப், பாசிப்பருப்பு - 1/4 கப்,

இஞ்சி - சிறிய துண்டு, மிளகு - 1/2 தேக்கரண்டி, பெருங்காயம் - சிட்டிகை, உப்பு - தேவைக்கேற்ப, எண்ணெய் - தேவைக்கேற்ப, கடுகு - 1/4 தேக்கரண்டி, உளுந்தம்பருப்பு - 1/4 தேக்கரண்டி, வறுத்த முந்திரி -10, கறிவேப்பிலை - சிறிது, எண்ணெய் - 2 மேசைக்கரண்டி.

செய்முறை: பாசிப்பருப்பை வெறும் வாணலியில் வாசனை வரும் வரை வறுத்துக் கொள்ளவும். குக்கரில் சுத்தம் செய்த தினையரிசி, பாசிப்பருப்பு, உப்பு, தேவையான நீர் சேர்த்து வேக விடவும். பிரஷர் வந்ததும் அடுப்பை சிம்மில் வைத்து 10 நிமிடம் கழித்து அணைக்கவும். வாணலியில் நெய் சூடாக்கி, முந்திரியை வறுத்து எடுத்துக் கொள்ளவும். பிறகு அதில் எண்ணெய் சேர்த்து, கடுகு, உ.பருப்பு, மிளகு, இஞ்சி, கறிவேப்பிலை, பெருங்காயம் தாளித்து, பொங்கலில் சேர்த்து கிளறி இறக்கவும்.

தகவல்: கிருஷ்ணகுமாரி ஜெயக்குமார், சென்னை-41.

**மூலிகைப் பயிர்கள்**: மூலிகைப் பயிர்களில் ஆய்வுகளை மேற்கொள்ள த.வே.பல்கலைக்கழகம், மூலிகை நிறுவனங்களோடு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்துள்ளது. மருந்து கூர்க்கன் ஆராய்ச்சி "சமிலேப்ஸ்' பெங்களூரு; செங்காந்தள் மலர் மருந்து பயிர் ஆராய்ச்சிக்கு ஆல் கெம் இன்டர்நேஷனல், புதுடில்லி ஆகிய நிறுவனங்களோடு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டது. விவசாயிகள் மற்றும் நிறுவனங்களுக்கு தேவையான பயிர் சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது. கோவை ஆரிய வைத்திய பார்மசியோடு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியிருப்பதால் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் திப்பிலி, அமுக்கிரான் கிழங்கு, நிலவேம்பு, ஆடதோடா போன்ற அரிய மூலிகைப்பயிர்களை தமிழ்நாடு விவசாயிகள் வணிக ரீதியாக சாகுபடி செய்யும் வாய்ப்பை பெறுவீர். இந்த அரிய மூலிகைப்பயிர்களை சாகுபடி செய்யும். விவசாயிகள் ஆர்ய வைத்திய பார்மசியுடன் நேரடி

ஒப்பந்தம் செய்து கொண்டு, அந்த நிறுவனத்திற்கு நேரடியாக விளைவித்த பொருட்களை வழங்கி பயன்பெறலாம். தகவல்: முனைவர் கு.ரா.ஆனந்தகுமார், துணைவேந்தர் (பொறுப்பு), த.வே.பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003.

**கரும்பு சாகுபடி**: ஒரு பருதுண்டு தொழில்நுட்பம் இம்முறையில் நாற்றங்கால் அல்லது தொழுஉரம் மண் கலவை நிரப்பப்பட்ட குழித்தட்டு மற்றும் பாலிதீன் பைகளில் விதைக்கப்பட்டு நாற்றங்காலில் ஒரு பரு நாற்றுகள் வளர்க்கப்படுகின்றன. இம்முறையில் ஒரு எக்டருக்கு 1 முதல் 1.5 டன் ஒரு பரு விதை மட்டுமே தேவைப்படுகிறது. ஒரு பரு துண்டு வெட்டி எடுத்து போக மீதமுள்ள கரும்பினை வெல்லம் தயாரிப்பதற்கோ அல்லது சர்க்கரை ஆலை பயன்பாட்டிற்கோ பயன்படுத்தலாம். வழக்கமான முறையை ஒப்பிடும் போது 80-90 சதவீதம் கரணை மீதப்படுத்தப்படுவதுடன், அதிக எடையுள்ள விதை கரணைகள் கையாள்வதில் ஏற்படும் சிரமமும் தவிர்க்கப்படுகிறது. நல்ல ஆரோக்கியமான பருக்களை தேர்ந்தெடுத்துக் கொண்டு நோய் பாதிக்கப்பட்ட அல்லது சேதாரமடைந்த பருக்களை எளிதில் நீக்கி விடலாம். இம்முறையில் ஆட்செலவு பெருமளவில் குறைகிறது. ஒரு பரு துண்டுகள் வெட்டுவதற்கு இயந்திரங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. கால் மிதியால் இயக்கப்படும் ஒரு பரு துண்டு வெட்டும் கருவி,காற்றழுத்தத்தால் இயக்கப்படும் ஒரு பரு துண்டு வெட்டும் கருவி, மின் மோட்டாரால் இயக்கப்படும் ஒரு பரு துண்டு வெட்டும் கருவி, குழித்தட்டுகளில் ஒரு பரு துண்டுகளை இடும் கருவி, டிராக்டரால் இயங்கும் இரண்டு வரிசையில் ஒரு பரு துண்டுகளைக் கொண்டு வளர்க்கப்பட்ட கரும்பு நாற்றுகளை நடும் கருவி. *மேலும் விவரங்களுக்கு*: முனைவர் செ.ஜேக்கப் அண்ணாமலை, மத்திய வேளாண்மை பொறியியல் நிறுவனம் பிராந்திய மையம், கோயம்புத்தூர்-641007. - **டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## கழிவில் இருந்து 'கான்கிரீட்'

உலக அளவில் சர்க்கரை உற்பத்தியில் இந்தியா நான்காம் இடம் வகிக்கிறது. இந்தியாவில் நாள் ஒன்றுக்கு பல நூறு டன்கள் கரும்புச் சக்கைகள் வீணாகின்றன. இந்த கரும்புச் சக்கையை எரித்து அதிலிருந்து வரும் சாம்பல் மூலமாக 'கான்கிரீட்' தயாரிக்கும் தொழில்நுட்பம் பரவலாகிறது. கரும்புச் சக்கைச் சாம்பலில் உள்ள சிலிகாவே கான்கிரீட்டிற்கு உறுதித் தன்மையைத் தருகிறது. கரும்புச் சக்கைச் சாம்பலுடன் சிமென்ட் குறிப்பிட்ட அளவு கலந்து 'கான்கிரீட்' தயாரிக்கப்படுகிறது. சாதாரண 'கான்கிரீட்டைப்' போலவே கரும்புச் சக்கை 'கான்கிரீட்டும்' உறுதியாகவே உள்ளது.

## தகவல் சுரங்கம்

## கம்பளியால் பெயர் பெற்ற ஊர்

கம்பளி நெசவு என்றாலே வடமாநிலங்களை மட்டும் தான் நினைக்கிறோம். ஆனால் தமிழர்கள் வாழ்விலும் கம்பளி இடம் பெற்றிருந்தது. குளிர்காலத்தில் கம்பளியை தானமாக தருவதும் வழக்கமாக இருந்தது. பூஜைக்கு தீட்டினை ஏற்படுத்தாத ஆடைகளின் பட்டியலில் பட்டோடு கம்பளியும் இடம் பெற்றிருந்தது. தென்காசியில் இருந்து சாம்பவர் வடகரை போகும் சாலையில் ஆய்குடி தாண்டி 'கம்பிளி' என ஓர் ஊர் உள்ளது. சமீப காலம் வரை இந்த ஊரில் கம்பளி நெசவு

நடைபெற்றுக் கொண்டிருந்ததால் 'கம்பளி' என பெயர் பெற்றது. கம்பளியே காலப்போக்கில் 'கம்பிளி' என மருவியது.

## நீர் வளத்தை பாதுகாக்க புஞ்சை நிலங்கள் சீரமைப்பு

உத்திரமேரூர்:ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி கிராமங்களில், நீர் வளத்தை பாதுகாக்கும் வகையில், புஞ்சை நிலங்களை இலவசமாக சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உத்திரமேரூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட அரும்புலியூர், ஆலஞ்சேரி, பழவேரி, ரெட்டமங்கலம் உள்ளிட்ட கிராமங்களில், ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் மூலம், நீர் மற்றும் நில வளங்களை பாதுகாக்கும் நோக்கில், பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அந்த திட்டத்தில், நீர் ஆதாரத்தை பாதுகாக்கும் வகையில், பண்ணை குட்டை அமைத்தல், கசிவு நீர் குட்டைகள் ஏற்படுத்துதல்; நீர்வரத்து கால்வாய்களில் தடுப்பணை கட்டுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தற்போது, விவசாயிகளின் புஞ்சை நிலங்களில், நீர் வளத்தை பாதுகாக்கும் வகையில், நிலங்களை சமன் செய்து, இலவசமாக சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுகுறித்து, மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை அதிகாரி சீனுவாசன் கூறியதாவது:

மழை நேரங்களில், விவசாய நிலங்களில் நீர் தேங்காமல், வேகமாக வடிந்து விடுகிறது. அதை தடுத்து, நிலங்களை வளப்படுத்த, இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நிலங்களை சீரமைக்க வசதியற்ற விவசாயிகளின் புஞ்சை நிலங்களை, இத்திட்டத்தில் சமன்படுத்தி வருகிறோம்.இவ்வாறு அவர் கூறினார்.

## விவசாயிகளுக்கு மானியத்தில் பவர் டிரில்லர்

டி.என்.பாளையம்: கோபி தாலுகா, டி.என்.பாளையம் ஒன்றியம், வேளாண்மைதுறை சார்பில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் கீழ் சிறு, குறு விவசாயிகளுக்கு, 75 ஆயிரம் மானியத்துடன் பவர் டிரில்லர் வழங்கப்படுகிறது. இதன்படி, டி.என்.பாளையம் வேளாண் அலுவலகத்தில் நேற்று நடந்த விழாவில் சேர்மேன் கந்தசாமி பவர் டிரில்லர் வழக்கினார். வேளாண் உதவி இயக்குநர் சிதம்பரம், வேளாண் அலுவலர் ஜெயக்குமார், உதவி வேளாண் அலுவலர் சசிக்குமார் கலந்து கொண்டனர்.

**சொட்டு நீர்ப்பாசனத்திற்கு ரூ. 77 லட்சம் மானியம்**

திண்டுக்கல்:திண்டுக்கல் மாவட்ட ஆதிதிராவிடர்களுக்கு சொட்டு நீர் பாசனத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ. 77 லட்சம் மானியத் தொகை வாங்க யாரும் முன்வரவில்லை.

தண்ணீர் பற்றாக்குறை காலங்களில் விவசாயிகள் பணிகள் செய்வதற்காக சொட்டு நீர் பாசன முறை கொண்டு வரப்பட்டது. குறைந்த அளவு தண்ணீரில் நல்ல சாகுபடி செய்திட முடியும்.

இதை ஊக்குவிக்கவே அரசு சார்பில் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. அனைத்து தரப்பு மக்களுக்கும் மானியத் தொகைகள் வழங்கப்பட்டு விட்டன .

ரூ.77 லட்சம் பாக்கி: 2014-15 ம் ஆண்டுக்கான ஆதிதிராவிட விவசாயிகள் சொட்டு நீர் பாசனம் அமைக்க வழங்கப்பட்ட ரூ. 90 லட்சம் மானியத் தொகையில் ரூ.13 லட்சம் மட்டுமே வழங்கப்பட்டது. மீதி ரூ.77 லட்சம் வாங்க ஆள் இல்லை.

சொட்டு நீர் பாசனம் அமைக்க விரும்பும் ஆதிதிராவிட விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள வட்டார வேளாண் அலுவலகத்தில் சிட்டா அடங்கல், ரேஷன் கார்டு, புகைப்படம் கொடுத்து விண்ணப்பித்து

கொள்ளலாம் என தோட்டக்கலை துறை துணை இயக்குனர் ராமநாதன் தெரிவித்தார்.

## மாற்று தீவனமாகும் மரவள்ளி குச்சி

வாழப்பாடி: பசுந்தீவனத்துக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், கிழங்கு அறுவடைக்கு பின் மிஞ்சும் மரவள்ளி குச்சிகளை கால்நடைகளுக்கு மாற்று தீவனமாக கொடுக்கின்றனர். வாழப்பாடி பகுதியில், வெள்ளாடு, கறவை மாடு உள்ளிட்ட கால்நடை வளர்ப்பில் ஏராளமானோர் ஈடுபட்டுள்ளனர். இதனால், கால்நடைகளுக்கு பசுந்தீவனம் கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டது. மாற்று தீவனமான புண்ணாக்கு, பருத்திக்கொட்டை, மரவள்ளி கிழங்கு திப்பி, மக்காச்சோள கழிவு போன்றவைகளின் விலையும் உயர்ந்துள்ளது. தீவனம் வாங்கிப்போட முடியாத நிலையில் இருந்த விவசாயிகளில் சிலர், அறுவடைக்கு பின் மிஞ்சிய மரவள்ளி குச்சிகளை கால்நடைகளுக்கு தீவனமாக கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். சாறு மிகுந்த மரவள்ளி குச்சிகளை, கால்நடைகள் விரும்பி ருசிப்பதால், மகிழ்ச்சியடைந்த அவர்கள் அவற்றை தீவனமாக கொடுக்கின்றனர். இதனால், மரவள்ளி குச்சிகளுக்கு மவுசு ஏற்பட்டுள்ளது.

## ஒருங்கிணைந்த பயிர் மேலாண் பயிற்சி

காடையாம்பட்டி: ஓமலூர் வட்டம் காடையாம்பட்டி வட்டாரத்தில், மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்தும் விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் (அட்மா) வேளாண்துறை சார்பில், விவசாயிகளுக்கு நெல்லின் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்து பயிற்சி நடந்தது. உதவி இயக்குனர் நாசர் தலைமை வகித்தார். பண்ணைப்பள்ளியில், 2.5 ஏக்கர் நிலம் கொண்ட முன்னோடி விவசாயி நிலத்தை தேர்வு செய்து அதில் நெற்பயிருக்கு தேவையான உயிர் உரங்கள், ரசாயன உரங்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள், 7,500 ரூபாய் மானியத்தில் வழங்கி செயல்விளக்கத்திடல் அமைக்கப்பட்டது. விதைகள்

தேர்வு, நல்விதை தேர்வு, உயிர் உர விதைநேர்த்தி ஆகிய தொழில்நுட்பங்களை செயல்விளக்கம் செய்து விளக்கப்பட்டது. முனிராசு, ரத்தினசாமி ஆகியோர் பயிற்சியளித்தனர்.

**தக்காளி விளைச்சல் அதிகரிப்பு விவசாயிகள் மகிழ்ச்சி**

ஆர்.எஸ்.மங்கலம்: ஆர்.எஸ்.மங்கலம் பகுதிகளில் சாகுபடி செய்துள்ள தக்காளியில் காய்ப்புத்திறன் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

ஆர்.எஸ்.மங்கலம் அருகே புல்லமடை, ரெகுநாதமடை, சேத்திடல், வண்டல், வரவணி, செங்குடி, பூலாங்குடி உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவில் மிளகாய் சாகுபடி செய்யப்படுகிறது.

அதற்கு ஊடு பயிராக இந்த ஆண்டு விவசாயிகள் தக்காளி சாகுபடி செய்தனர். சீதோஷண நிலை நன்றாக இருந்ததால்தக்காளி பயிர்களின் காய்ப்பு திறன் அதிகரித்துள்ளது. இதனால் ஒரு செடிக்கு 30 க்கும் மேற்பட்ட காய்கள் வரை காய்த்துள்ளன. மகசூல் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**57 கண்மாய்களில் கருவேலமர ஏலம் ரூ.1.76 கோடி வசூல்**

சிவகங்கை:மாவட்டத்தில் 57 கண்மாய்களில் கருவேல மரங்களை வெட்டுவதற்கு நடந்த ஏலத்தில் ரூ.1.76 கோடிக்கு ஏலம் எடுத்தனர்.

சிவகங்கையில் மாவட்ட வனத்துறை சார்பில், 61 கண்மாய்களில் வளர்க்கப்பட்ட கருவேல மரங்களை வெட்டுவதற்கான ஏலம் நேற்று நடந்தது. மாவட்டம் முழுவதும் இருந்து, ஏராளமான ஏலதாரர்கள் பங்கேற்றனர். 57 கண்மாய்கள் ஏலம் எடுக்கப்பட்டன. கலெக்டர் மலர்விழி மேற்பார்வையில் வனத்துறை அதிகாரிகள் நடத்தினர். மாலை

வரை நடந்த ஏலத்தின் மூலம் ரூ.1 கோடியே 76 லட்சத்திற்கு மேலான ஏலத்தொகை அரசுக்கு வசூலானது என, வனத் துறையினர் தெரிவித்தனர்.

## கிணறுகளில் நீர்மட்டத்தை தக்கவைக்க தாணிப்பாறை ஆற்றில் தடுப்பணைகள் விவசாயிகள் எதிர்பார்ப்பு

வத்திராயிருப்பு:விவசாய கிணறுகளில் நீர்மட்டத்தை தக்கவைக்க தாணிப்பாறை ஆற்றில் ஆங்காங்கே தடுப்பணை கட்ட அப்பகுதி விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

சதுரகிரி மலையிலிருந்து உற்பத்தியாகி அடிவாரமான தாணிப்பாறைக்கு வந்து சேரும் நீர் ஆறுவழியே ஆயர்குளம், மாத்தூர்குளம், ஆலங்குளம் கண்மாய்களுக்கும், அதைத் தொடர்ந்து அடுத்தடுத்த கண்மாய்களுக்கும் செல்கிறது.

இங்கு மழைக்காலங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படும்போது வெள்ளம் ஆற்றின் இரு கரை களையும் அரித்து கரைத்து விடுவதுடன் அதை ஒட்டி அமைந்துள்ள விவசாய நிலங்களையும், மரங்களையும் வேரோடு அரித்து நீரில் இழுத்து சென்று விடுகிறது. இதனால் விவசாயிகள் பெரும் இழப்புகளை சந்திக்கின்றனர்.

ஏற்கனவே இந்த ஆற்றில் மணல் திருட்டால் ஆற்றின் ஆழம் அதிகரித்ததால் கிணறுகளில் நீர்பிடிப்பு இல்லாமல் போனது. இதனை தவிர்ப்பதற்காக விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று 2012ல் விவசாயத்துறையின் சார்பில் பரிசோதனை முயற்சியாக இரு இடங்களில் 4 அடி உயரத்திற்கு சிறு தடுப்பணைகள் கட்டப்பட்டது.

இதன் வழியே கடந்து செல்லும் நீர் தடுப்பணையில் தேங்கி சென்றதால் ஆற்று நீரின் வேகம் கட்டுப்படுத்தப்பட்டு கரைகளின் அரிப்பு தடுக்கப்பட்டது. அத்துடன் தடுப்பணையின் உயரத்திற்கு மணல்

தேங்கியதால் கிணறுகளிலும் நீர்மட்டம் பாதுகாக்கப்பட்டது. எனவே இந்த ஆற்றில் மேலும் சில குறிப்பிட்ட இடங்களில் தடுப்பணை கட்டினால் விவசாயிகள் பயன்பெறுவதோடு 1000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

அத்துடன் மகாராஜபுரம் பகுதிக்காக இந்த ஆற்றில் அமைக்கப்பட்டுள்ள போர்வெல்களும் மற்ற குடிநீர் ஆதாரங்களும் பாதுகாக்கப்படும். இதனை வலியுறுத்தி இப்பகுதி விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை மனு அனுப்பியுள்ளனர்.

தாணிப்பாறை விவசாயி மலைக்கனி,""தற்போது பரிசோதனையாக கட்டப்பட்ட இரு தடுப்பணை களும் ஒவ்வொன்றும் தலா ஒருலட்சரூபாயில் தான் கட்டப்பட்டது. ஆனால் அதைவிட விவசாயிகளுக்கு அதிக பலன் கிடைத்துள்ளது. கோடைகாலத்திலும்கூட கிணறுகளில் நீர்கசிவு இருந்தது. ஒரு தடுப்பணையின் மூலம் 200 ஏக்கர் நிலங்கள் பாதிப்பிலிருந்து தப்பியது. எனவே இந்த ஆற்றில் மேலும் சிலவற்றை கட்ட விவசாயத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## முட்டை விற்பனையில் புது குழப்பம்: என்இசிசி உயர்த்திய விலையை பண்ணையாளர்கள் குறைத்தனர்



நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் நேற்று முன்தினம், தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு (என்இசிசி), முட்டை விலையில் 9 காசு உயர்த்தி, ஒரு முட்டையின் விலை 415 காசாக நிர்ணயித்தது. வடமாநிலங்களில் கடும் குளிரால் முட்டை தேவை அதிகரிக்கிறது. இதனால் விலை உயர்ந்து வருகிறது என பண்ணையாளர்கள் தெரிவித்தனர். ஆனால், ஐதராபாத் மண்டலத்தில் 400காசுக்கு முட்டை விற்கப்படுகிறது. இவை தமிழக முட்டை மார்க்கெட் பகுதியான கேரளா, சென்னைக்கு வந்து விடுகிறது.

இதனால் நாமக்கல் பண்ணையாளர்கள் தங்கள் பண்ணையில் இருப்பு உள்ள முட்டையை விற்பனை செய்ய, என்இசிசி நிர்ணய விலையில் இருந்து குறைத்து விற்க துவங்கினர். ஒவ்வொரு பண்ணையாளரும்

ஒவ்வொரு விலை நிர்ணயிப்பதால் இந்த தொழிலில் குழப்பமான நிலை உருவானது.

இந்நிலையில் நேற்று முன்தினம் பண்ணையாளர்கள், முட்டை வியாபாரிகள் அடங்கிய ஆலோசனை கூட்டம் முதலைப்பட்டியில் நடைபெற்றது. இதில் என்இசிசி அறிவிக்கும் பெரிய முட்டை விலையில் இருந்து 20 காசு மட்டும் குறைத்து விற்கவேண்டும்.

அதற்கு மேல் விலையை குறைக்கக்கூடாது என முடிவு செய்யப்பட்டது. என்இசிசியின் பண்ணை கொள்முதல் விலை 415 காசு. பண்ணையாளர்களின் விலை 395 காசு. இப்படி இரட்டை விலை அமல்படுத்தப்படுவதால், கடைகளில் முட்டை வாங்கும் பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றனர். யாபாரிகளுக்குதான் இதனால் நல்ல லாபம் கிடைக்கிறது என பண்ணையாளர்கள் குற்றம்சாட்டுகின்றனர்

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவள்ளூர், : திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், வரும் 29ம் தேதி காலை 11 மணிக்கு மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற உள்ளது என கலெக்டர் சுந்தரவல்லி அறிவித்துள்ளார்.இக்கூட்டத்தில், வேளாண்மை, தோட்டக்கலை, வருவாய், மின்வாரியம், கூட்டுறவு உட்பட அனைத்து துறை அதிகாரிகளும் கலந்துகொண்டு, விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர். எனவே, மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு பயன்பெறலாம். இவ்வாறு கலெக்டர் அறிவித்துள்ளார்.

## பசுந்தாள் உரம் பயிரிட விவசாயிகளுக்கு □2 ஆயிரம் மானியம் வேளாண்மை அதிகாரி தகவல்

செயயாறு, : பசுந்தாள் உரம் பயிரிட விவசாயிகளுக்கு □2 ஆயிரம் மான்யம் வழங்கப்படுவதாக அனக்காவூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ஏ.எம்.சாந்தி தெரிவித்தார். அனக்காவூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ஏ.எம்.சாந்தி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது: விவசாயிகள் பசுந்தாள் உரப்பயிரிட்டு மடக்கி உழுவதால் மண்வளம் பெருகி தழைச்சத்து கிடைக்கும். இதனால் மகசூல் அதிகரிக்கும். மேலும், விவசாயிகளுக்கு சாகுபடி செலவு 50 சதவீதம் குறைய வாய்ப்புண்டு. வேளாண்மை துறையின், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் பசுந்தாள் உரப்பயிரிட்டு, மடக்கி உழவு செய்யும் விவசாயிகளுக்கு ஒரு எக்டருககு □2 ஆயிரம் மானியமாக வழங்கப்படும். இத்தொகை விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்தப்படும். அனக்காவூர் வட்டார விவசாயிகள், பின்னேர்ப்பு மானிய விண்ணப்பத்துடன் பசுந்தாள் உரபயிர் சாகுபடி செய்துள்ள போட்டோவை இணைத்து விண்ணப்பித்து, பயன் அடையலாம். மேலும் விபரங்கள் அறிய விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள வேளாண்மை உதவி அலுவலரை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் அவர் கூறியிருந்தார்.

## சிறு தேயிலை விவசாயிகளுக்கு கிலோவுக்கு ரூ. 16 வழங்க நடவடிக்கை தேயிலை செயல் வாரிய இயக்குனர் தகவல்

கோத்தகிரி : கோத்தகிரி அருகிலுள்ள காவிலோரை பகுதியில் தேயிலை தொழிற்சாலையை திறந்து வைத்து பேசிய தேயிலை செயல்வாரிய இயக்குனர் பால்ராஜ் தெரிவிக்கையில்: தேயிலை தொழிற்சாலை அமைக்க கடந்த காலங்களில் கொல்கத்தா சென்று வரை வேண்டியிருந்தது. ஆனால் தற்போது தேயிலை விவசாயிகளின்

வசதிக்காக குன்னூரிலேயே அனுமதி வழங்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும் தேயிலை விவசாயிகள் தரமான தேயிலையை தொழிற்சாலைக்கு கொடுத்து உயர்வான விலையை பெற வேண்டும். தரமற்ற இலைகளை தேயிலை தொழிற்சாலைகள் வாங்குவதை தவிர்க்க வேண்டும். விவசாயிகளின் நன்மை கருதி சிறிய தேயிலை தொழிற்சாலை அமைப்பவர்களுக்கு 40 சதவிகித மானியமும் வழங்கப்படுகிறது. இதுவரை தேயிலை தொழிற்சாலைகள் தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூ. 13 வழங்கி வந்தது. தரமான தேயிலையை வழங்கும் விவசாயிகளுக்கு பிப்ரவரி மாதம் முதல் கிலோ ஒன்றுக்கு ரூ.16 விலை நிர்யணம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## கரூர் மாவட்டத்தில் மரவள்ளி கிழங்கு கொள்முதல் விலை கடும் உயர்வு

கரூர், : மரவள்ளிக்கிழங்கு கொள்முதல் விலை உயர்ந்துள்ளது. கரூர் மாவட்டம் நொய்யல், வேட்டமங்கலம், ஒரம்புபாளையம், ஓலப்பாளையம், நல்லிகோயில், கவுண்டம்புதூர், குளத்துப்பாளையம், புன்னம் உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் மரவள்ளிக்கிழங்கு பயிரிட்டுள்ளனர். விளைந்த மரவள்ளிக் கிழங்குகளை புதுச்சத்திரம், செல்லம்பட்டி, புதன்சந்தை, நாமகிரிபேட்டை, ஜேடர்பாளையம், ஆத்தூர் போன்ற பகுதிகளில் செயல்படும் சவ்வரிசி தயாரிக்கும் கிழங்குமாவு மில்களுக்கு அனுப்பி வைக்கின்றனர். மரவள்ளிக் கிழங்குகளை டார்ச் பாய்ன்ட் அடிப்படையில் கொள்முதல் செய்யப்படுகிறது. சவ்வரிசி விலை உயரும்போது மரவள்ளிக் கிழங்கின் விலையும் உயரும். சவ்வரிசி விலை சேகோசர்வ் மூலம் நிர்ணயம் செய்யப்படுகிறது. கடந்த வாரம் மரவள்ளி கிழங்கு டன்னுக்கு ரூ.5ஆயிரத்துக்கு விலைபோனது. இந்த வாரம் ரூ.6 ஆயிரத்திற்கு விற்பனையானது. மேலும் சிப்ஸ் தயாரிப்பவர்கள் டன்னுக்கு ரூ.6,500

விலை கொடுத்து வாங்கி சென்றனர். விலை உயர்ந்துள்ளதால் மரவள்ளிக்கிழங்கு பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## நெல் அறுவடையைத் தொடர்ந்து உளுந்து சாகுபடி மேற்கொண்டால் குறைந்த செலவில் அதிக வருவாய் வேளாண் துறை ஆலோசனை

அன்னவாசல், : புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது நடைபெற்று வரும் நெல் அறுவடையைத் தொடர்ந்து உளுந்து சாகுபடி மேற்கொண்டால் குறைந்த செலவில் அதிக வருவாய் ஈட்டலாம் என்று வேளாண் துறை ஆலோசனை தெரிவித்துள்ளது. இதற்காக விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய நவீன தொழில்நுட்பங்கள் குறித்து வேளாண் இணை இயக்குநர் சந்திரசேகரன், குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத் தலைவரும், வேளாண் துணை இயக்குநருமான சாந்தி, வேளாண் அலுவலர் செல்வி ஆகியோர் கூட்டாக வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: புதுக்கோட்டை மாவட்டத்தில் நெல் அறுவடை தற்போது தீவிரமாக நடைபெற்றுவருகிறது. அறுவடைக்குப் பிறகு நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களில் உளுந்துச் சாகுபடி மேற்கொண்டால் அதிக அளவில் வருவாய் ஈட்டலாம். பொதுவாக நெல் சாகுபடிக்கு 1200 மி.மீ. நீர் தேவை. ஆனால், உளுந்துச் சாகுபடிக்கு 350 முதல் 400 மி.மீ. வரையிலான நீர் போதுமானது. அதாவது ஒரு ஏக்கர் நெல் சாகுபடிக்குத் தேவையான நீரைப் பயன்படுத்தி 3 ஏக்கர் உளுந்துச் சாகுபடி செய்யலாம். உளுந்துப் பயிரின் வேர்களில் வேர்முடிச்சு உள்ளதால் அவற்றில் தழைச்சத்து உள்ளிழுக்கப்பட்டு மண்வளம் மேம்படுகிறது. சந்தையில் உளுந்தம் பருப்பு கிலோ ஒன்று 200 ரூபாய் வரை விற்கப்படுகிறது. அதனால் அதிக அளவில் வருமானம் கிடைக்கிறது. உளுந்துப் பயிர் குறுகியகாலப் பயிர். அதாவது 70 நாட்களில் அறுவடை செய்துவிடலாம். உளுந்துப் பயிருக்கான சாகுபடிச் செலவும்குறைவு.

ரகங்கள்: வம்பன் 4 முதல் 7 வரையிலான உயர் விளைச்சல் தரும் ரகங்களைப் பயன்படுத்தினால் மஞ்சள் தேமல் நோய்த் தாக்குதலைத் தடுக்கலாம். ஏக்கருக்கு யூரியா 22 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 25 கிலோ, பொட்டாஷ் 16 கிலோ இடவேண்டும். இதற்கு ஏக்கருக்கு 8 கிலோ உளுந்துவிதைதேவை.

விதை நேர்த்தி: ஒரு கிலோ உளுந்து விதைக்கு நான்கு கிராம் டிரைக்கோடெர்மா விரிடி அல்லது 10 கிராம் சூடோமோனாஸ் புளோரசன்ஸ் எதிர் உயிர்ப் பூஞ்சாண மருந்து கலந்து 24 மணிநேரத்திற்குள் விதைக்கவும். இத்துடன் ஒரு பொட்டலம் ரைசோபியம் (பயறு), பாஸ்போபாக்டீரியா ஆகிய நுண்ணுயிர் உரங்கள் ஒவ்வொன்றிலும் 200 மி.லி. எடுத்து ஆறிய அரிசிக் கஞ்சியுடன் கலந்து 15 நிமிடம் நிழலில் உலர்த்தி விதைக்கலாம்.

விதைப்பு: வரிசைக்கு வரிசை 30 செ.மீ. இடைவெளியும் பயிருக்குப் பயிர் 10 செ.மீ. இடைவெளியும் இருக்குமாறு பயிர் எண்ணிக்கையைச் சீர்காத்தல் வேண்டும். ஏக்கருக்கு 2 கிலோ பயறு நுண்ணூட்டக் கலவையைத் தேவையான அளவு மணலுடன் கலந்து விதைக்கும் முன் சீராகத் தூவுதல் வேண்டும். இதனை அடியுரமாக இடுதல் கூடாது.

அறுவடை: காய்கள் 80 சதவீதம் முதிர்ச்சியடைந்தவுடன் செடிகளை அறுத்து வெயிலில் காயவைத்துக் கையினாலோ இயந்திரங்களைக் கொண்டோ மணிகளைப் பிரிக்கலாம். விதைகளை நன்கு காயவைத்து, அதாவது ஈரப்பதம் 10 சதவீதத்துக்கும் குறைவாக இருக்குமாறு தூய்மையான கோணிப் பைகளில் சேகரிக்க வேண்டும். இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில்தெரிவித்துள்ளனர்.

களைமேலாண்மை

விதைத்த 3ம் நாள் 200 லிட்டர் நீரில் ஏக்கர் ஒன்றுக்கு 1.3 லிட்டர் பென்டிமெத்திலின் 30 இ.சி. தெளித்துக் கட்டுப்படுத்தலாம். அதனைத் தொடர்ந்து விதைத்த 20ம் நாளில் கைக்களை எடுத்தல் வேண்டும். விதைத்தவுடன் ஒருமுறையும், 3ம் நாள் உயிர் நீராகவும் நீர் பாய்ச்சுதல் வேண்டும். பின்பு 10 நாட்கள் இடைவெளியில் நீர்ப் பாய்ச்சுதல் வேண்டும். 2% டி.ஏ.பி. கரைசல் தெளித்தல்: ஏக்கருக்கு 4 கிலோ டி.ஏ.பி. உரத்தை 10 லிட்டர் நீரில் 12 மணிநேரம் ஊறவைத்துப் பின்பு தெளிந்த கரைசலைத் தேவையான நீருடன் கலந்து 200 லிட்டர் கரைசலாக்கிக் கைத்தெளிப்பான் மூலம் இலைகள் நன்கு நனையுமாறு பூக்கும் சமயம் ஒருமுறையும் 15 நாட்கள் கழித்து மறுமுறையும் மாலை வேளையில் தெளித்தல் வேண்டும். இதனால் பூக்கள் உதிர்வது தடுக்கப்பட்டு மிகுந்த காய்கள் பிடித்து பெருவிளைச்சல் கிடைக்கிறது.

## மக்காச்சோள பயிரில் தண்டுதுளைப்பான் நோய் தடுக்க வேளாண்துறை அறிவுரை

பழநி, : மக்காச்சோள பயிரில் ஏற்படும் தண்டு துளைப்பான் நோயை தடுப்பது குறித்து பழநி வேளாண்மை அதிகாரிகள் ஆலோசனை வழங்கி உள்ளனர்.பழநி பகுதியில் சுமார் 11 ஆயிரம் ஹெக்டேர் அளவிற்கு மக்காச்சோளம் பயிரிடப்பட்டு உள்ளது. இப்பயிர்கள் வளர்ச்சி நிலையை அடையும் போது தண்டு துளைப்பான் நோய் ஏற்படும். இதனை தவிர்க்க என்டோசல்பான் மருந்தை ஒரு ஏக்கருக்கு 200 மில்லி எனும் அளவில் கலந்து தெளிக்க வேண்டும். 15 நாட்களுக்கு பின் மீண்டும் இதேபோல் அமைக்கவேண்டும்.

மேலும் இக்காலங்களில் ஏற்படும் அடிச்சாம்பல் நோயை தவிர்க்க 1 லிட்டர் தண்ணீரில் 1 கிராம் மெட்டலாக்சின் மற்றும் 2.5 கிராம்

மேன்போசெட்ஸ் மருந்தை கலந்து தெளிக்க வேண்டும். இதுதொடர்பான கூடுதல் விபரங்களுக்கு விவசாயிகள் அந்தந்த பகுதி வேளாண் அலுவலர்களையோ அல்லது வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தையோ தொடர்பு கொள்ளலாமென பழநி வேளாண்துறை அதிகாரிகள்தெரிவித்துள்ளனர்.

## நெற்பயிரில் பூச்சிகளை கட்டுப்படுத்த பயிற்சி

சிவகங்கை, : தேவகோட்டை அருகே சித்தனூர், கண்ணங்குடி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் டீலக்ஸ் பொன்னி பயிரிடப்பட்டது. இதனால் எதிர்ப்புத்திறன் குறைந்து அதிக அளவில் நோய் தாக்குதல் ஏற்பட்டது. குறிப்பாக நெற்பயிரில் குலைநோய், பாக்டீரியா இலைக்கருகல்நோய் மற்றும் இலைசுருட்டுப்புழுவின் தாக்குதல்கள் அதிகமாக காணப்பட்டது. இதையடுத்து வட்டார வேளாண்மைத்துறை சார்பில் விவசாயிகளுக்கு விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் மூலம் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை பயிற்சியளிக்கப்பட்டது. பேராசிரியர்கள் சதீஸ்குமார், அழகப்பன் விவசாயிகளுக்கு பயிற்சி முறை குறித்து விளக்கமளித்தனர்.

## மண்மாதிரி முடிவுகளின்படி உரமிட வேண்டும் விவசாயிகளுக்கு வேளாண்துறை அறிவுரை

நெல்லை, : மண்மாதிரி முடிவுகளின்படி உரமிட வேண்டும் என விவசாயிகளுக்கு வேளாண்துறை அறிவுறுத்தியுள்ளது. நெல்லை மாவட்டத்தில் தற்போது பிசான சாகுபடி நடவுப்பணி தீவிரம் அடைந்துள்ளது. வேளாண்துறை களப்பணியாளர்கள் மூலம் விளைநிலங்களில் மண்மாதிரிகள் எடுத்துள்ளது. மானாவாரி நிலங்களுக்கு 10 எக்டேருக்கு ஒரு மண் மாதிரியும், நீர்பாசனம் உள்ள விளைநிலங்களுக்கு 2.5 எக்டேருக்கு ஒரு மண் மாதிரியும்

எடுக்கப்பட்டுள்ளது.

ஆய்வு முடிவுகள் மண்வள அட்டையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் உரமிடும்போது மண்வள அட்டையில் உள்ள பரிந்துரைகள்படி உரமிடும்போது மகசூல் கூடுதலாக கிடைக்கும். பூச்சி நோய் தாக்குதலும் குறைகிறது. உரச்செலவும் குறைகிறது. மண்மாதிரிகள் ஆய்வின் மூலம் களர் மற்றும் களர் உவர் நிலங்களை கண்டறிய முடியும். அட்டை பரிந்துரைப்படி உரமிடும்போது களர் மற்றும் களர் உவர் நிலங்களை சீர்திருத்த இயலும். விவசாயிகள் மண்வள அட்டைகளை கொண்டு அருகிலுள்ள வேளாண் விரிவாக்க மையங்களை அணுகி உரமிட வேண்டும் என மாவட்ட வேளாண்மை இயக்குனர் பெருமாள்தெரிவித்துள்ளார்.

தினத் தந்தி DAILY THANTHI

**இன்றைய வேளாண் செய்திகள்**

## ஆக்கிரமிப்பு போல மாசுபடுத்தப்படும் ஆறுகள்



எந்த ஒரு நாட்டிலும், எல்லா செழுமைகளும் நீர்வளத்தில்தான் இருக்கிறது. அதனால்தான், ‘ஆற்று வளம்தான் நாட்டின் வளம்’ என்று ஒரு பேச்சுமொழி உண்டு. தமிழ்நாட்டை பொருத்தமட்டில், இங்கேயே உற்பத்தியாகும் ஆறு என்றால் அது தாமிரபரணி ஒன்றுதான். தாமிரபரணி ஆறுதான் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பொதிகை மலையில் தோன்றி, தூத்துக்குடி மாவட்டத்தில் கடலில் கலக்கிறது. இந்த மாநிலத்தில் 34 ஆறுகள் ஓடுகின்றன. இந்த ஆறுகளுக்குட்பட்ட வடிநிலங்களில் மேற்கொள்ளப்பட்ட நுண்ணிய ஆய்வுகளின் அடிப்படையில் தமிழ்நாட்டின் மொத்த நீர்வள ஆதாரம் 885 டிஎம்சி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதில், அண்டை மாநிலங்களில் இருந்து ஒப்பந்தங்கள் மூலம் பெறப்படும் 264 டிஎம்சி தண்ணீரும் அடங்கும். ஆக, கிடைக்கும் ஒவ்வொரு சொட்டு தண்ணீரையும் வீணாக்காமல் தூய்மையாக வைத்து பயன்படுத்தவேண்டிய கட்டாயம் தமிழ்நாட்டுக்கு இருக்கிறது.

ஒருபக்கம் தண்ணீரை வீணாக்குகிறோம் என்றாலும், மறுபக்கம் கிடைக்கும் தண்ணீரையும் தகுந்த வகையில் பாதுகாக்காமல் மாசுபடுத்துகிறோம் என்ற தகவல் ஆதாரபூர்வமாக இப்போது வெளியாகியிருப்பது அதிர்ச்சியை அளிக்கிறது. மக்களுக்கு இதய நாளமாக விளங்கும் ஆறுகள், எப்படி பாழ்படுத்தப்படுகிறது என்பதை மத்திய அரசாங்கத்தின் சுற்றுச்சூழல் அமைச்சகமே வெளியிட்டுள்ளது. காவிரி, அதன் துணை ஆறுகள், பவானி, சரபங்கா, திருமணிமுத்தார், வசிஷ்டா மற்றும் பாலார், தாமிரபரணி ஆகிய ஆறுகளில் ஓடும் தண்ணீர் மிகவும் மாசுபடுத்தப்பட்டு அசுத்தமாக ஓடுகிறது. இந்த ஆறுகளுக்குள் அதன் அருகில் உள்ள ஊர்களில் இருந்து கழிவுநீர்கள் அப்படியேயோ அல்லது ஓரளவுக்கு சுத்திகரிக்கப்பட்டோ விடப்படுகிறது. போதாக்குறைக்கு அருகில் உள்ள தொழிற்சாலைகளில் இருந்தும் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் ஆற்றுக்குள் விடப்படுகின்றன. இந்த

தகவலை சமீபத்தில் மத்திய மந்திரி பிரகாஷ் ஜவ்டேகரே ராஜ்ய சபாவில் கூறியிருக்கிறார். கழிவுநீரை சேகரித்து, அதை எடுத்துக்கொண்டு போய் சுத்திகரிக்கும் பொறுப்பும், அது நீர்நிலைகளுக்குள் விடப்பட்டு அதை மாசுபடுத்தாமல் இருக்கச்செய்யும் கடமையும் மாநில அரசுக்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் இருக்கிறது என்றும் மத்திய மந்திரி கூறியிருக்கிறார்.

தமிழ்நாட்டில் ஏற்கனவே ஆற்று மணல் கொள்ளையடிக்கப்பட்டு, நீர்ப்பிடிப்பு இல்லாததால் தண்ணீர் நிற்காமல் கடலில் போய் விழுந்துவிடுவதால், நீர்வளம் பெரிதும் பாதிக்கப்படுகிறது, நிலத்தடிநீர் உயர வாய்ப்பு இல்லாமல் ஆற்று மணல் கொள்ளையடிக்கப்படுகிறது. கேரளாவில் ஆற்று மணலை அள்ளுவதற்கு தடை இருக்கும் நிலையில், தமிழ்நாட்டில் இருந்துதான் மணல் கொள்ளை அடிக்கப்பட்டு கடத்தப்படுவது தன் தாயின் உடலை அறுத்து ரத்தத்தை எடுத்து விற்பதற்கு சமம் என்று பகுத்தறிவாளர் ஒருவர் கூறியது, நூற்றுக்கு நூறு சரியாகும். நீர்நிலைகள் ஆக்கிரமிப்பை அகற்ற நீதிமன்றங்கள் பிறப்பித்த உத்தரவுகளுக்கேற்ப, இப்போது நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளதுபோல, ஆற்று மணலை எடுப்பதற்கு கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதும், ஆற்றுநீரை மாசுபடுத்தும் நடவடிக்கைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டியதும் தமிழக அரசு, மாசுகட்டுப்பாட்டு வாரியம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் தலையாய கடமையாகும். இஸ்ரேல் போன்ற நாடுகளில் கழிவுநீரை சுத்திகரித்து விவசாயத்துக்கு பயன்படுத்தப்படுகிறது. இதற்கென செயல்முறையை வாஷிங்டனில் உள்ள சர்வதேச உணவு பதப்படுத்தும் ஆராய்ச்சி நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம். இந்த திட்டத்தை செயல்படுத்த தேவையான நிதி உதவியை உலக வங்கி, சர்வதேச வேளாண் வளர்ச்சி நிதியம், ஐக்கிய நாட்டு சபையின் உணவு மற்றும் விவசாய நிறுவனத்திடம் இருந்து பெறமுடியும் என்கிறார்,

எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன முதன்மை விஞ்ஞானி பரசுராமன். நமது ஆற்றுவளத்தை பாதுகாக்க தமிழக அரசு இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும்.

## கேசர்குளிஅல்லா அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு



4 ஆயிரம் ஏக்கர் நிலம் பயன்பெறும் வகையில் கேசர்குளிஅல்லா அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு ஒன்றியம் கேசர்குளிஅல்லா அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விட அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி நேற்று அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கலெக்டர் விவேகானந்தன், கே.பி.அன்பழகன் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு மதகில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர்

திறந்து வைத்து மலர் தூவினர். அப்போது கலெக்டர் கூறியதாவது:-

தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு வட்டம் கேசர்குளிஅல்லா அணையில் இருந்து தற்போது உள்ள தண்ணீர் வரத்தை கொண்டு பாலக்கோடு வட்டத்தில் உள்ள ஆயக்கட்டு பகுதிகளில் உள்ள 4 ஆயிரம் ஏக்கர் நிலம் பயன்பெறும் வகையில் தண்ணீர் திறந்து விட தமிழக அரசு உத்தரவிட்டது. அதன்படி அணையின் இடது மற்றும் வலதுபுற கால்வாயில் ஒவ்வொரு கால்வாயிலும் 2 மண்டலங்களாக பிரித்து முதல் மண்டலத்திற்கு 5 நாட்களும், 2-வது மண்டலத்திற்கு 5 நாட்களும் என முறை வைத்து வினாடிக்கு 30.345 கன அடி வீதம் 105 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படும். 4 ஆயிரம் ஏக்கர் பயன்பெறும்

இதனால் பாலக்கோடு வட்டத்திலுள்ள திருமல்வாடி, பெலமாரனஅள்ளி, பேவுஅள்ளி, சீரியம்பட்டி, எர்ரகுட்டனஅள்ளி, பூதிஅள்ளி மற்றும் நல்லூர் கிராமத்தில் உள்ள 4 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். எனவே பாலக்கோடு வட்டத்தில் உள்ள விவசாய பொதுமக்கள் பொதுப்பணித்துறையினருடன் ஒத்துழைத்து தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி அதிக விளைச்சல் பெறும் நோக்குடன் செயல்பட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சிக்கு தலைவர் நாகராஜன், ஒன்றியக்குழு தலைவர் கருணாகரன், மாவட்ட வருவாய் அலுவலர் (பொறுப்பு) துர்காமூர்த்தி, தர்மபுரி உதவி கலெக்டர் ராமமூர்த்தி, பொது பணித்துறை செயற்பொறியாளர் பாலசுப்பிரமணியம், உதவி செயற்பொறியாளர் சிங்காரவேல், உதவி பொறியாளர் சேதுராஜன், தாசில்தார் தமிழரசன் மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## பூஞ்சை நச்சுகளை பரிசோதனை செய்து பயன்படுத்த வேண்டும் ஆராய்ச்சி நிலையம் அறிவுறுத்தல்




சூரியகாந்தி மற்றும் கடலை புண்ணாக்கில் பூஞ்சை நச்சுகளை பரிசோதனை செய்து பயன்படுத்த வேண்டும் என வானிலை ஆராய்ச்சி நிலையம் சார்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

வானிலைஅறிக்கை

நாமக்கல் மாவட்டத்தில் இன்று முதல் 3 நாட்களுக்கு நிலவும் வானிலை குறித்து நாமக்கல் கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளியிடப்பட்டு உள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது :-

அடுத்த 3 நாட்கள் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மழை பெய்ய வாய்ப்பு இல்லை. காற்று மணிக்கு 3 கி.மீ.வேகத்தில் தென்கிழக்கு திசையில் இருந்து வீசும். வெப்பநிலையை பொறுத்த வரையில் அதிகபட்சமாக 91.4 டிகிரியாகவும், குறைந்தபட்சமாக 71.6 டிகிரியாகவும் இருக்கும். காற்றின் ஈரப்பதம் அதிகபட்சமாக முறையே 75, 76, 77 சதவீதமாகவும், குறைந்தபட்சமாக 52, 53, 54 சதவீதமாகவும் இருக்கும்.

வானிலை

அடுத்த 3 நாட்களுக்கான நாமக்கல் மாவட்ட வானிலையில் தொடர்ந்து பகல் மற்றும் இரவு வெப்ப அளவுகள் சற்றே உயர்ந்த அளவுகளில் நீடிக்கும். இது கோழிகளுக்கு சாதகமான வானிலை என்பதால், கோழிகளில் தீவன எடுப்பு , முட்டை உற்பத்தி மற்றும் முட்டை எடை ஆகியவை இயல்பாகவே காணப்படும். இருப்பினும் தொடர்ந்து சூரியகாந்தி மற்றும் கடலை புண்ணாக்கு போன்றவற்றில் பூஞ்சை நச்சுக்களின் அளவுகளை பரிசோதனை மூலம் தெரிந்து கொண்டு , அவற்றை பயன்படுத்துவது குறித்து முடிவு செய்ய வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.